பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
20 08 2024 7 15
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசிய புவி அறிவியல் விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

2. அரசுப் பணிகளில் உயர் பதவிகளுக்கு நேரடி தேர்வு மூலம் அதிகாரிகளை நியமிப்பது காங்கிரஸ் ஆட்சியில்தான் அறிமுகப்படுத்தப்பட்டதாக மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

3. இந்திய ராணுவத்தில் எடுக்கப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து உயர் அதிகாரிகளுடன் தலைமைத் தளபதி உபேந்திர திவிவேதி புதுதில்லியில் ஆலோசனை நடத்தினார்.

4. இந்தியாவின் வடமேற்கு, மேற்கு, கிழக்கு மற்றும் மத்திய பகுதிகளில் அடுத்த நான்கு நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. பாரீசில் நடைபெற இருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் சார்பில் 84 வீரர் - வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

தேசிய புவி அறிவியல் விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

மத்திய அரசின் சுரங்கத்துறை அமைச்சகத்தால் புவி அறிவியல் துறையின் சார்பில் ஏற்படுத்தப்பட்ட மதிப்பு மிக்க இந்த விருது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

வாழ்நாள் சாதனைக்கான தேசிய புவி அறிவியல் விருது, தேசிய புவி அறிவியல் விருது, தேசிய இளம் புவி அறிவியலாளர் விருது ஆகிய 3 பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படுகின்றன.

சென்னை ஐ.ஐ.டி-யின் கட்டுமான பொறியியல் துறையின் பேராசிரியர் திருமலா குடிமெல்லா ரகுகாந்திற்கு நிலநடுக்கம், நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கு, சுனாமி போன்ற பேரிடர்கள் சார்ந்த ஆய்விற்காக தனிநபர் பிரிவில் அவருக்கு விருது வழங்கப்படுகிறது.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மூன்று நாள் பயணமாக போலந்து மற்றும் யுக்ரைன் நாடுகளுக்கு நாளை புறப்பட்டுச் செல்கிறார்.

45 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியப் பிரதமர் முதல் முறையாக போலந்து நாட்டுக்குச் செல்வதாக வெளியுறவுத் துறை செயலர் திரு. **Tanmay Lal** தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கிடையே 70 ஆண்டுகாலமாக அரசு ரீதியிலான உறவுகள் நிலவி வருவதாக அவர் தெரிவித்தார்.

போலந்து தலைநகர் வார்சாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வரவேற்பு அளிக்கப்படுவதாகவும், அதன் பின்னர் போலந்து பிரதமர் திரு. டொனால்டு டஸ்க்-ஐ சந்தித்துப் பேச இருப்பதாகவும் அவர் கூறினார்.

அந்நாட்டு அதிபர் திரு. **Andrzej Duda**-வையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்து உரையாடுகிறார்.

மேலும் அங்குள்ள இந்திய வம்சாவளியினருடன் அவர் கலந்துரையாடுகிறார்.

வர்த்தக மற்றும் தொழில்துறை சார்ந்த பிரதிநிதிகளுடன் பிரதமர் சந்தித்துப் பேசுகிறார்.

அதன் பின்னர் வெள்ளிக்கிழமையன்று யுக்ரைன் செல்லும் பிரதமர், அந்நாட்டு அதிபர் திரு. வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை சந்தித்து உரையாடுகிறார்.

30 ஆண்டுகாலமாக இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகள் குறித்து இரு தலைவர்கள் விவாதிக்கின்னறர்.

ரஷ்யா – யுக்ரைன் இடையிலான போரை நிறுத்தி அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்குவதற்குத் தேவையான உதவிகளை இந்தியா

வழங்கிட தயாராக இருப்பதாகவும் வெளியுறவுத்துறை செயலாளர் திரு. **Tanmay Lal** செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

அரசுப் பணிகளில் உயர் பதவிகளுக்கு நேரடி தேர்வு மூலம் அதிகாரிகளை நியமிப்பதை காங்கிரஸ் ஆட்சியில்தான் அறிமுகப்படுத்தப்பட்டதாக மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பல்வேறு துறைகளில் உயரதிகாரிகள் நேரடியாக பணியில் அமர்த்தப்பட்டனர் என்றும், முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கும் நேரடியாக பிரதமராக்கப்பட்டார் என்றும் அவர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இந்த முறையை மாற்றியமைத்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் வெளிப்படைத்தன்மையுடன் நேரடி நியமனங்கள் செய்யப்படுவதாகவும் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் தெரிவித்தார்.

<<<<>>>>

கிராமப்புற வங்கிகளின் மண்டல அளவிலான அதிகாரிகளுடன் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் புதுதில்லியில் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது கிராமப்புற வங்கிகளின் செயல்பாடுகள், மின்னணு தொழில்நுட்ப சேவைகளை மேம்படுத்துவது, சிறு, குறு நிறுவனங்களின் வர்த்தக வளர்ச்சியை ஊக்குவிப்பது குறித்து அவர் ஆலோசனை நடத்தினார்.

பிரதமரின் விஷ்வகர்மா திட்டம், சூரிய மின்சக்தி திட்டம் ஆகிய திட்டங்களில் கடனுதவி வழங்குவது குறித்தும் அவர் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் விவசாயிகளுக்கான கடன் வசதிகள் அளிப்பது குறித்தும் அவர் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் மலைப்பிரதேசங்களில் மின்னணு வங்கி வர்த்தக சேவைகளை மேம்படுத்துவது குறித்தும், புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவது குறித்தும் அவர் கலந்தாலோசித்தார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று மலேசியப் பிரதமர் திரு. அன்வர் இப்ராஹிமை சந்தித்து உரையாடுகிறார்.

அதன் பின்னர் அவரை கௌரவிக்கும் வகையில் விருந்தளிக்கிறார்.

மூன்று நாள் பயணமாக நேற்றிரவு இந்தியா வந்துள்ள மலேசியப் பிரதமர், குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை, குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று சந்தித்துப் பேசுகிறார்.

அதன் பின்னர் அவர் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், மலேசியப் பிரதமரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து கலந்தாலோசிக்கிறார்.

இந்தியா — மலேசியாவுக்கு இடையிலான சமூக, கலாச்சார உறவுகள் நீடித்து வருவதாகவும், வரலாற்று ரீதியாக மிக உறுதியான இருதரப்பு உறவுகள் இருந்து வருவதாகவும் வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியப் பிரதமர் திரு. அன்வர் இப்ராஹிமின் இந்தியப் பயணம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், இதன்மூலம் இருநாடுகளுக்கு இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புகள் மேம்படுத்தப்படும் என்றும் வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்தியா - ஜப்பான் பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் இடையிலான பேச்சுவார்த்தைகள் புதுதில்லியில் இன்று நடைபெறுகின்றன.

இதில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ஜப்பான் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. கிஹாரா மினோரு, அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி யோகோ காமிகாவா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கிடையே பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், ஜப்பான் பாதுகாப்பு அமைச்சருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் நடத்த உள்ளார்.

இந்த இருதரப்பு பேச்சுவார்த்தையில் மண்டல மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்படும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்திய ராணுவத்தில் எடுக்கப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து உயர் அதிகாரிகளுடன் தலைமைத் தளபதி உபேந்திர திவிவேதி புதுதில்லியில் நேற்று ஆலோசனை நடத்தினார்.

வளர்ச்சியடைந்த இந்தியா-2047 என்ற இலக்கை நோக்கி இந்திய ராணுவம் செயல்படுத்த இருக்கும் திட்டங்கள் குறித்து அவர் விவாதித்தார்.

இந்திய ராணுவத்தின் திறன்களை மேம்படுத்துவதற்கும், ராணுவத்தினர் தயார்நிலையில் இருப்பது குறித்தும் ராணுவ தலைமையகங்களை மாற்றியமைப்பது குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்திய ராணுவத்தை நவீனப்படுத்துவதற்கான போர்க்கருவிகள், அதற்குத் தேவையான கட்டமைப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து எதிர்கால சவால்களை சமாளிக்கும் விதத்திலான போர்ப்பயிற்சிகளில் ஈடுபடுவது குறித்தும் தலைமைத் தளபதி உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

சுயசார்பு இந்தியா திட்டத்தின்கீழ் பாதுகாப்பு துறையால் உற்பத்தி செய்யப்படும் ஆயுதங்கள் மற்றும் தளவாடங்களைப் பயன்படுத்துவது மற்றும் இவற்றை ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக இந்திய ராணுவம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ரஷ்ய கடற்படையின் தலைமைத் தளபதி அட்மிரல் அலெக்சாண்டர் அலெக்சேவிச் மொய்சேயெவ் நான்கு நாள் பயணமாக இந்தியாவிற்கு வருகை தந்துள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையிலான கடற்படை உறவுகளை வலுப்படுத்தும் விதத்திலும், கடற்படை ஒத்துழைப்புக்கான புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவது குறித்தும் இந்தப் பயணத்தின்போது அவர் இந்திய கடற்படை தளபதிகளுடன் ஆலோசனை நடத்துகிறார்.

இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே. திரிபாதியை நேற்று புதுதில்லியில் சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்து விவாதித்தார்.

ரஷ்ய கடற்படை தலைமைத் தளபதி, இந்திய ராணுவ தளபதி, பாதுகாப்புத்துறை செயலாளர், தேசிய கடல்சார் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் ஆகியோரையும் சந்தித்துப் பேச உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இந்தியாவின் வடமேற்கு, மேற்கு, கிழக்கு மற்றும் மத்திய பகுதிகளில் அடுத்த நான்கு நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் தெற்குப் பகுதியில் நாளை வரை மழை பெய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு, ஹிமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களின் பெரும்பாலான பகுதிகளில் வரும் வெள்ளிக்கிழமை வரை கனமழை பெய்யக்கூடும் என்றும் கூறியுள்ளது.

பங்களாதேஷின் தெற்கு வங்கக்கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவித்துள்ளது.

குறிப்பாக மேற்குவங்கம், ஜார்கண்ட், பீஹார், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அடுத்த 3 நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை பெய்ய வாய்ப்பிருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பாரீசில் நடைபெற இருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியினருடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று காணொலி காட்சி வாயிலாக கலந்துரையாடினார்.

வரும் 28ஆம் தேதி இந்தப் போட்டிகள் தொடங்குகின்றன.

இந்தப் பயணம் மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கையில் மிக முக்கியமானது என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும் நாட்டிற்கும் அதிமுக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

140 கோடி இந்தியர்களும், மாற்றுத்திறனாளிகள் வெற்றிபெற ஆசிர்வதிப்பதாகவும் அவர் கூறினார்.

இதுபோன்ற மிகப்பெரிய விளையாட்டு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்கு தைரியமும், அர்ப்பணிப்பு உணர்வும், தியாகமும் மிக முக்கியமானவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பல்வேறு தடைகளைத் தாண்டி சாதனை படைக்க வாழ்த்துவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

பாரீசில் நடைபெறும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியில் 84 பேர் இந்தியாவின் சார்பில் பங்கேற்க உள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

இதில் 50 சதவீதம் பேர் முதல் முறையாக ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த முறை டோக்கியோவில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் போட்டியில் 19 விருதுகளை இந்திய அணியினர் பெற்றதாகவும், 2022ஆம் ஆண்டு ஆசிய மாற்றுத்திறனாளிகள் விளையாட்டுப் போட்டியில் 111 விருதுகளைப் பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த முறை இந்திய அணியினர் மேலும் பல பதக்கங்களைப் பெற்று இந்தியாவுக்கு பெருமை சேர்ப்பார்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

**<<<<The end>>>>**